Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, ஆகஸ்ட் 21, 2026 | இதழ் 130

## என் டேபிளில் உள்ள 3 துறைகளின் கோப்புகளை ஓபன் பன்ன வச்சிராதீங்க: முதல்வர் விஜய் பேச்சு



சென்னை, 21 ஆகஸ்ட் 2026: தமிழக சட்டசபையில் நேற்று நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சுற்றுலா-கலை மற்றும் பண்பாட்டுத்துறை ஆகிய துறைகள் மீதான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தின்போது திமுக எம்எல்ஏ ஐ. பெரியசாமி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை குறித்து பல்வேறு கருத்துகளை தெரிவித்தார். அதற்கு அத்துறை அமைச்சர் என்.ஆனந்த் பதில் அளித்தார். இதற்கிடையில் திமுக மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருக்கிறதா என எம்எல்ஏ ஐ.பெரியசாமி கேள்வி எழுப்பினார்.

அப்போது முதல்வர் விஜய் பேசியதாவது: இதை நான் சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் எதிர்க்கட்சியினர் ஆதாரம், ஆதாரம் என்று கேட்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்பு நிதி அமைச்சர் பேசும்போது 3 துறைகள் குறித்து ஆய்வு செய்த கோப்புகள் எனது மேஜையில் இருப்பதாக தெரிவித்தார். அதை ஒன்றும் நிதி அமைச்சர் போற போக்கில் சொல்லவில்லை. உண்மையிலேயே அந்த கோப்புகள் எனது மேஜையில் தான் இருக்கிறது.

அத்தனையும் ஆதாரத்துடன் இருக்கிறது. ஓபன் பன்ன வச்சிராதீங்க. எதை எப்போ ஓப்பன் பண்ணனுமோ, அப்போ கரெக்டா எல்லாமே ஓப்பன் ஆகும். மக்களிடம் எப்போது பேச வேண்டும்; என்ன பேசனும், எப்படி பேசனும் என்று எல்லாம் பேசிவிட்டு தான் அன்பாக, ஆசையாக எங்கள் எல்லாரையும் இங்கே கொண்டு வந்து உட்கார வைத்துள்ளார்கள். நான் பேசுவேன், பேசக்கூடாது என்றெல்லாம் இல்லை. இடைத்தேர்தலிலாவது சில பேருக்கு நல்லது நடக்கணும்ல... என்று கூறினார்.

அமைச்சர் ரமேஷ்: நம்முடைய அண்ணன்கள் எல்லாருமே பேசுங்கள். பேசுங்கள் என்கிறார்கள். ஆனால், முதல்வர் பேச ஆரம்பித்தார் என்றால், ஆதாரத்தை காட்ட ஆரம்பித்தார் என்றால் என்ன நடக்கும் என்பதை இதில் இருந்தே உடனடியாக புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

## தொகுதி மறுவரையறை விவகாரம் - அமித்ஷா முன் ஒரே வாரத்தில் அந்தர் பல்டி அடித்த முதல்வர் விஜய்.!!

சென்னை 21, ஆகஸ்ட் 2026: ஒன்றிய உள்துறை அமித்ஷா தலைமையில் இன்று நடந்த தென்மண்டல கவுன்சில் கூட்டத்தில், ‘மக்களவையில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையாததை சட்ட ரீதியாக உறுதி செய்ய வேண்டும்’ என தமிழக முதல்வர் விஜய் பேசியுள்ளார்.

தொகுதி மறுவரையறை குறித்து முதல்வர் விஜய் பேசியிருப்பதில் என்ன இருக்கிறது என்று நீங்கள் யோசித்தால், இந்த விவகாரத்தில் முதல்வர் விஜய், ஒரே வாரத்தில் தனது நிலைப்பாட்டில் இருந்து அந்தர் பல்டி அடித்துள்ளார் அதுவும் அமித்ஷா முன்னிலையில் என்பதை இங்கே தெளிவுபடுத்துகிறோம்.

ஏனென்றால் கடந்த ஆகஸ்ட் 9, 2026 அன்று நடந்த அனைத்து எம்.பி. க்கள் கூட்டத்திலும் சரி, ஆகஸ்ட் 12, 2026 அன்று சட்டப்பேரவையிலும் சரி, ’தொகுதி மறுசீரமைப்பே கூடாது. தற்போது உள்ள 543 என்ற எண்ணிக்கையை உயர்த்த கூடாது’ என தவெக சார்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை இங்கே நினைவுபடுத்துகிறோம்.

கடந்த வாரம் மக்களவை எம்.பி.க்கள் எண்ணிக்கையை மாற்றவே கூடாது, 543 என்ற எண்ணிக்கை நிரந்தரமாக்கப்பட வேண்டும் என கடந்த ஆகஸ்ட் 12-ஆம் தேதி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது இந்த தவெக அரசு, இதற்கு எதிர்க்கட்சியான திமுக ஆதரவளித்தது.

இப்படி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில், இன்று “மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையாததை சட்ட ரீதியாக உறுதி செய்ய வேண்டும்” என மட்டுமே முதல்வரின் பேச்சில் இடம் பெற்றிருக்கிறது. முதல்வரின் பேச்சு "மக்கள் தொகை நிலைப்படுத்துதலில் அடைந்த வெற்றியின் காரணமாக, நாடாளுமன்றத்தில் எந்தவொரு மாநிலத்தின் பிரதிநிதித்துவ விகிதமும் குறைக்கப்படாது என்பதற்கான தெளிவான சட்டப்பூர்வமான உத்தரவாதத்தை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இத்தகைய அணுகுமுறை சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதுடன், நமது அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள கூட்டாட்சி சமநிலையைப் பாதுகாக்கவும், நமது ஜனநாயக அமைப்புகள் மீதான அனைத்து மாநிலங்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் உதவும்" என மட்டுமே கூறி இருக்கிறார்.

இந்த பேச்சின் மூலம் தொகுதி மறுவரையறை பிரச்னையில் No Delimitation என்ற தனது நிலைப்பாட்டிலிருந்து, அந்தர் பல்டி அடித்து Fair Delimitation என்ற அதிமுக-வின் நிலைப்பாட்டிற்கு முதல்வர் விஜய் மாறியுள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

No Delimitation விளக்கம்:

தற்போதைய மக்களவை (லோக் சபா) இடங்களின் எண்ணிக்கையை 543-ஆக அப்படியே நீட்டிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் இதில் மாற்றம் செய்ய கூடாது.

இதுவே போன வார தவெக அரசின் நிலைப்பாடு மற்றும் தீர்மானம்.

Fair Delimitation விளக்கம்:

மக்கள் தொகை மாற்றத்திற்கு ஏற்ப தொகுதிகளை மாற்றியமைக்க வேண்டும், ஆனால் எந்த ஒரு மாநிலத்தின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமும் குறைந்து விடாதபடி சட்டப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பது தவெக அரசின் தற்போதைய நிலைப்பாடு.

## ஈரானுடனான வர்த்தகம் மற்றும் நிதிப் பரிவர்த்தனைகள் முழுமையாக நிறுத்தம்.! அமீரகம் அதிரடி..



சென்னை, 21 ஆகஸ்ட் 2026: ஐக்கிய அரபு அமீரகம் (யூஏஇ) ஈரானுடனான அனைத்து வர்த்தக மற்றும் நிதிப் பரிவர்த்தனைகளையும் உடனடியாகவும், மறு உத்தரவு வரும் வரையிலும் நிறுத்தியுள்ளது. மத்திய கிழக்கில் நீடிக்கும் பதற்றம் காரணமாக அமீரக வெளியுறவு அமைச்சகம் மேற்கண்ட அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வளைகுடா கப்பல் போக்குவரத்து பாதைகளை நோக்கி ஈரானில் இருந்து ஏவப்பட்ட இரண்டு அதிநவீன ஏவுகணைகளை அமீரக பாதுகாப்புப் படை கண்டறிந்ததை அடுத்து இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஈரான், அமீரகத்தின் மீது ஏவுகணைகளை கொண்டு தாக்குதலை நடத்தியது.

அமீரகத்தின் பிராந்திய கடல் பகுதிக்கு அருகில், கடல்சார் போக்குவரத்தை இலக்காகக் கொண்டு ஏவப்பட்ட இரண்டு ஏவுகணைகளை ஈரான் ஏவியதாக அமீரகம் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் அமீரகத்தை நோக்கி ஏவுகணைகளை ஏவியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஈரான் வெளியுறவு அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. ஆனால் ஈரானின் விளக்கத்தை ஏற்றுகொள்ள தயாராக இல்லாத யூஏஇ, அந்நாட்டுடனான அனைத்து வர்த்தக மற்றும் நிதிப் பரிவர்த்தனைகளையும் நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

அமீரகத்தின் இந்த திடீர் அறிவிப்பால் இரு நாடுகளுக்கும் இடையே ஆண்டுதோறும் நடைபெறும் பில்லியன் கணக்கான டாலர் மதிப்புள்ள வர்த்தகம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஈரான் இறக்குமதி செய்யும் பொருட்களில் சுமார் 30% அமீரகத்தின் வழியாகவே செல்கிறது. மேலும், ஈரானுக்கான முதன்மை நிதிச் சந்தையாகவும் அமீரகம் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி ஜம்மு காஷ்மீர்: அமெரிக்க தூதர் திட்டவட்டம்



சென்னை 21, ஆகஸ்ட் 2026: அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர், 2 நாள் பயணமாக ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கிற்கு சென்றுள்ளார். நேற்று ஸ்ரீநகர் சென்றடைந்ததும் முதல்வர் உமர் அப்துல்லாவை அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் சந்தித்து பேசினார். பின்னர், உமர் அப்துல்லாவுடன் செர்ஜியோ கோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது, செர்ஜியோ கோர் கூறுகையில், ஜம்மு- காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் மிக முக்கியமான பகுதி. இயற்கை எழில் கொஞ்சும் இப்பகுதிக்கு வர ஏராளமான அமெரிக்கர்கள் விரும்புகின்றனர். ஒன்றிய அரசும் ஜம்மு- காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவும் அப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்ய பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதை பாராட்டுகிறேன்.

அமெரிக்கா பல்வேறு நாடுகளுக்கு பயண எச்சரிக்கைகளை வெளியிடுவதை நாங்கள் மறுபரிசீலனை செய்து வருகிறோம். பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ள சூழலில், ஜம்மு-காஷ்மீருக்கு அமெரிக்க பயணிகள் வருகை தர தற்போதுள்ள பயண கட்டுப்பாடுகள் மற்றும் எச்சரிக்கைகளை அமெரிக்க அரசு மறுபரிசீலனை செய்யும். மிக சுமூகமாகவும் நட்புறவோடும் இந்த சந்திப்பு அமைந்ததாகவும், வாஷிங்டன் மற்றும் டெல்லி திரும்பிய பிறகு இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். இரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த இந்த பயணம் உதவும்’ என்றார்.

ஜம்மு காஷ்மீருக்கு 2019ல் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பிறகு அங்கு அமெரிக்க தூதர் ஒருவர் செல்வது இதுவே முதல் முறையாகும். இந்த பேச்சு வார்த்தை மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று கூறிய முதல்வர் உமர் அப்துல்லா, இந்தியா - அமெரிக்கா இருதரப்பு உறவுகள் குறித்தும், குறிப்பாக ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சிக்கு அமெரிக்கா எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.



# தமிழ்நாடு நீட் தேர்வை எதிர்த்து டெல்லியுடன் போராடும் நிலையில், மகுடஞ்சாவடியில் உள்ள இலவச பயிற்சி மையம் நீட் தேர்வில் சாதனை!

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: தமிழ்நாடு அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய தேர்வுகளில் ஒன்றாக நீட் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழகத்தின் சொந்த நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து, இந்த மாதம் தமிழக சட்டப்பேரவை ஒருமனதாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது. அரசு பள்ளி மற்றும் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களைவிட வசதியான பின்னணியைக் கொண்ட, ஆங்கில வழியில் படிக்கும் நகர்ப்புற மாணவர்களுக்கு நீட் தேர்வு சாதகமாக இருப்பதாக தமிழக அரசு அமைத்த நீதிபதி ஏ.கே. ராஜன் குழுவும் கண்டறிந்துள்ளது. இந்த சட்ட மற்றும் அரசியல் போராட்டம் டெல்லியிலும் நீதிமன்றங்களிலும் தொடர்ந்து கொண்டிருக்க, இந்த இடைவெளியை ஒரு சிறிய கிராமத்தில் செயல்படும் இலவச பயிற்சி மைய மாணவர்கள் தகர்த்து வருகின்றனர்.

ஆகஸ்ட் 13ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணியளவில், ஓமந்தூரார் அரசு மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே நீட் கலந்தாய்வு நிறைவடைந்து கொண்டிருந்தபோது, திருமதி காயத்ரி ஆனந்த கிருஷ்ணன் தனது காரில் தனியாக அமர்ந்து, கடந்த ஓராண்டு கால உழைப்பின் பலனை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் நடத்தி வரும் இலவச பயிற்சி மையத்தில் பயின்ற, தமிழகத்தின் சிறிய கிராமங்களைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பில் இடம் பெற்றிருந்தனர். "ஒரு வருட கால அர்ப்பணிப்பு, விடா முயற்சி, எதிர்மறை எண்ணங்கள், போராட்டங்கள் மற்றும் கனவுகளுக்கு கிடைத்த அங்கீகாரமாக அந்த ஒரு இரவு இருந்தது. எங்கள் கிராமங்களில் உள்ள வீடுகளில் இருந்து, மகுடஞ்சாவடியில் உள்ள வகுப்பறைகளுக்கு, அங்கிருந்து மருத்துவக் கல்லூரிகளின் நடைபாதைகளுக்கு எங்கள் குழந்தைகள் வந்திருக்கும் பயணம் எங்களுக்கு பெருமிதமான தருணம்" என்றார்.

சண்முகநாதன் கனகவல்லி அறக்கட்டளையின் கீழ் செயல்படும் இந்த பயிற்சி மையத்தை காயத்ரி தலைமை தாங்கி நடத்தி வருகிறார். கோயம் புத்தூரைச் சேர்ந்த கங்கா மருத்துவமனை நிறுவனம் சார்பில் 2024ஆம் ஆண்டு இந்த மையம் தொடங்கப் பட்டது. அதே ஆண்டில் காயத்ரியின் மகனும் நீட் தேர்வை எழுதினார். சிலுவம் பாளையம், கவுண்டனேரி, வெள்ளாண்டி வலசு உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த மையத்தில்



பயின்று வருகின்றனர். சில மாணவர்கள் வகுப்புகளுக்காக தினமும் இரண்டு மணி நேரம் வரை பயணம் செய்து, பின்னர் பகுதி நேர வேலைகளைச் செய்து, இரவு நேரங்களில் படித்துள்ளனர். அதிக சிரமங்களை எதிர்கொண்ட பெண் மாணவர்களுக்காக பின்னர் விடுதி வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

இது குறித்து காயத்ரி பகிர்ந்து கொண்டதாவது, "இந்த மாணவர்களிடம் முயற்சியோ அல்லது ஆர்வமோ இல்லாதது பிரச்சினையாக இருக்கவில்லை. அவர்களுக்குத் தேவையான வாய்ப்பும் வசதியும் இல்லாததுதான் பிரச்சினை. அருகில் நீட் பயிற்சி மையம் இல்லாதது, பயிற்சிக் கட்டணத்தை செலுத்த முடியாதது, தமிழில் போதுமான கல்வி வளங்கள் இல்லாதது, குறிப்பாக மாணவிகளுக்கு தொடர்ந்து முயற்சி செய்ய ஊக்கம் இல்லாதது போன்றவை மிகப்பெரிய தடைகளாக இருந்தன.

தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகள் மாற்றியமைக்கப்பட்டன. வாரந்தோறும் தேர்வுகள் நடத்தப்பட்டதுடன், ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவர்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. தமிழ் வழியில் படித்த மாணவி ஒருவர், 'கேள்வி புரிந்தால் தானே அதற்கான பதிலை சொல்ல முடியும் மேடம்' என தனது சிரமத்தை எளிமையாக புரிய வைத்தார். இது அனைவருக்கும் சமமான தேர்வு கிடையாது. அது ஒரு போராட்டமாக இருந்தது. மாணவர், பெற்றோர் மற்றும் ஆசிரியர் என மூவரும் பகிர்ந்து கொண்ட ஒரே கனவுதான் மாற்றத்தை ஏற்படுத்தியது" என்றார்.

இந்த முயற்சிக்கு சிஎஸ்ஆர் ஆதரவு கொடுத்த கோயம் புத்தூர் கங்கா மருத்துவமனை நிர்வாகம், ஆலோசகர்கள் சதீஷ் மற்றும் ராஜேஷ், ஆசிரியர்கள் செந்தில், சக்திவேல், திலகம், ஒருங்கிணைப்பாளர் அருண் தங்கராஜ் மற்றும் டைபிஸ்ட் சுகன்யா ஆகியோருக்கும் காயத்ரி நன்றி தெரிவித்தார். "இந்தக் குழந்தைகள் நிச்சயம் இந்த உதவியை மற்றவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்று சிறிய அளவில் இது தொடங்கியிருந்தாலும் நாளை மிகப் பெரிய மாற்றமாக இது இருக்கும்" என்று அவர் கூறினார்.

# ஒடிசாவில் பலத்த மழை: வெள்ளத்தில் சிக்கிய 3.5 லட்சம் பேர் மீட்பு

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: ஒடிசாவில் பலத்த மழை காரணமாக 3.5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒடிசா மாநிலத்தில் இம்மாத தொடக்கத்தில் இருந்தே பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பிரம்மபுத்திரா உள்ளிட்ட முக்கிய ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மழை குறைந்த பிறகு பல மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்ப தொடங்கியது. இருப்பினும் பாலசோர், பத்ராக், ஜாஜ்பூர், கேந்திரபாரா, மயூர்பஞ்ச் மற்றும் கியோன்ஜார் ஆகிய 6 மாவட்டங்கள் இன்னும்



வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன.

6 மாவட்டங்களில் இதுவரை 3.5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப் பட்டு, தற்காலிக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டெக்னிப் எனர்ஜீஸ் இந்தியா, தனது பன்முகத்தன்மை வாய்ந்த, எதிர்காலத்திற்குத் தயாரான பணியாளர் குழுவை வலுப்படுத்தும் வகையில் புதிய பயிற்சியாளர்களை வரவேற்கிறது

சென்னை 21, ஆகஸ்ட் 2026: டெக்னிப் எனர்ஜீஸ் இந்தியா தனது 2026 ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சியாளர்கள் குழுவை வரவேற்றுள்ளது. இது எதிர்காலத்திற்குத் தயாரான திறமைகளை வளர்ப்பதற்கும், எரிசக்தித் துறையின் எதிர்காலத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய பணியாளர்களை உருவாக்குவதற்குமான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த ஆண்டின் உள்வாங்கலில் முக்கிய சிறப்பம்சமாக, பயிற்சியாளர் திட்டத்தினுள் பன்முகத்தன்மை தொடர்ந்து வலுவாக இருப்பது அமைகிறது. உலகளாவிய பன்முகத்தன்மை வழித்தடத்துடன் இணைந்து, இளம் பயிற்சியாளர்களின் ஒட்டுமொத்த பன்முகத்தன்மை விழுக்காடு 63% ஆக உள்ளது. இது, சம வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பொறியியல் பணிகளுக்கு மாறுபட்ட திறமைகளை ஈர்த்தல் ஆகியவற்றில் நிறுவனத்தின் நீடித்த உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் பீப்பிள் அண்ட் கல்ச்சர், இந்தியா, இயக்குநர், மதன் சந்திரசேகரன், மேலும் கூறும்பொழுது, "எங்களின் வெற்றி எங்கள் மக்களுடன் தொடங்குகிறது. எங்கள் பட்டதாரி வேலைவாய்ப்புத் திட்டத்தில் மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளாக 60%க்கும் மேற்பட்ட பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பேணுவது, திறமை செழிக்கவும், வழிநடத்தவும், வளரவும் கூடிய வாய்ப்புகளை உருவாக்குவதில் எங்களின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது." என்றார்.

நிறுவனத்தின் வருடாந்திர வளாக ஆட்சேர்ப்பு திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 90+ பயிற்சியாளர்கள் அனைவரும், தொழில்நுட்பப் பயிற்சி, வழிகாட்டல், மற்றும்



நேரடி திட்ட அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கட்டமைக்கப்பட்ட ஓராண்டு மேம்பாட்டுப் பயணத்தை மேற்கொள்வார்கள். இதன் மூலம், டெக்னிப் எனர்ஜீஸின் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கும் பணிக்கு பங்களித்து, மேலும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க உதவுவார்கள்.

டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் இந்தியா மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்திய நிர்வாக இயக்குநர் தவேந்திர குமார் கூறும்பொழுது, "பல்வேறு கண்ணோட்டங்கள் ஒன்றிணையும் போது புத்தாக்கம் செழித்து வளர்கிறது. புதிய கருத்துக்கள், ஆர்வம், மற்றும் லட்சியம் ஆகியவற்றைக் கொண்டுவரும் புதிய தலைமுறை பயிற்சியாளர்களை வரவேற்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இன்று உள்ளடக்கிய திறன் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம், நிலையான தீர்வுகளை வடிவமைத்து வழங்க உதவும் ஒரு கூட்டுழைப்பு மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான பணியாளர்களை நாங்கள் உருவாக்குகிறோம்." என்று கூறினார். இந்தியா, டெக்னிப் எனர்ஜீஸின் உலகளாவிய செயல்பாடுகளில் தொடர்ந்து ஒரு மூலோபாய பங்கினை வகித்து வருகிறது. வளர்ந்து வரும் திறமைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், நிறுவனத்தின் பொறியியல் சிறப்புத்திறனை வழங்கும் திறனை வலுப்படுத்துவதோடு, ஒரு மேலும் நிலையான எதிர்காலத்தை முன்னேற்றுவதிலும் உதவுகின்றன.

# 1937 தீர்மானத்தை சுட்டிக்காட்டி "வந்தே மாதரம்" முதல் 2 அடிகள் மட்டுமே பாடப்படும்: காங்கிரஸ் திட்டவட்டம்

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: நடந்து முடிந்த மழைக்கால கூட்டத்தொடரில், 'அனைத்து அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் இசைக்க வேண்டும்' என மசோதா நிறைவேற்றி ஒன்றிய பாஜ அரசு சட்டமாக்கியது. 6 அடி கொண்ட 3 நிமிடம் 10 வினாடிகள் நீளமுள்ள வந்தே மாதரம் பாடல் பாடப்பட வேண்டும் என ஒன்றிய அரசு அறிவுறுத்தியது.

கடந்த சுதந்திரத்தின விழாவில் காங்கிரஸ் தலைமையகத்தில் வந்தே மாதரம் இசைக்கும்போது அதை பாதியில் நிறுத்துமாறு சோனியா காந்தி சைகை செய்ததாக பாஜ குற்றம்சாட்டியது. ஆனால் மூத்த தலைவர் கார்கே அமர நாற்காலி எடுத்து வரவே சோனியா சைகை செய்ததாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று டெல்லியில் நடைபெற்ற 4 மணி நேரத்திற்கும் மேலான செயற்குழு கூட்டத்திற்கு பிறகு நிருபர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் மற்றும் ஜெயராம் ரமேஷ் ஆகியோர் இத்தகவலை தெரிவித்தனர். 1937ம் ஆண்டு காங்கிரஸ் செயற்குழு தீர்மானத்தை மீண்டும் உறுதி செய்துள்ளதாக அவர்



கள் தெரிவித்தனர்.

பின்னணி என்ன?: அக்டோபர் 28, 1937 அன்று மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், சர்தார் வல்லபாய் படேல் மற்றும் மௌலானா ஆசாத் ஆகியோர் முன்னிலையில் காங்கிரஸ் செயற்குழு முதல் முறையாக இத்தீர்மானத்தை நிறைவேற்றியது.

பங்கிம் சந்திரர் எழுதிய 'ஆனந்தமடம்' நாவலில் இடம்பெற்ற வந்தே மாதரம் பாடலின் முதல் 2 சரணங்கள் தாய்நாட்டை போற்றுவதாகவும், பிந்தைய சரணங்கள் குறிப்பிட்ட மத மற்றும் புராண குறியீடுகளை கொண்டிருப்பதாகவும் அமைந்துள்ளன. எனவே, அனைத்து தரப்பு மக்களும் இணையும் தேசிய நிகழ்வுகளுக்கு முதல் 2 சரணங்கள் மட்டுமே பொருத்தமானவை என ரவீந்திரநாத் தாகூர் ஜவஹர்லால் நேருவுக்கு கடிதம் மூலம் ஆலோசனை வழங்கினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# வாடிக்கையாளர்களுக்கு ஒரு மதிப்பு-கூட்டப்பட்ட வேக முதலீட்டு உத்தியை வழங்கும் வகையில் ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் பிளஸ்இ 500 மொமென்டம் வால்யூ 50 இன்டெக்ஸ் ஃபண்ட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: தேர்ந்தெடுக்கப்பட்ட யூனிட்-இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டங்கள் (யூஎல்ஐபி) மூலம் வாடிக்கையாளர்களுக்கு நீண்டகால ஈக்விட்டி வாய்ப்புக்களுக்கான அணுகலை வழங்குகிற மதிப்பு மற்றும் உந்துதல் ஆகிய இரண்டு முதலீட்டு உத்திகளையும் இணைக்கும் ஒரு விருப்பமான ஐசிஐசிஐ ப்ருடென்ஷியல் லைஃப் பிளஸ்இ 500 மொமண்டம் வால்யூ 50 இன்டெக்ஸ் ஃபண்டை இந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவிக்கையில், ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை முதலீட்டு அதிகாரி திரு. மணீஷ் குமார் கூறுகையில், "பிளஸ்இ 500 மொமெண்டம் வால்யூ 50 இன்டெக்ஸ் ஃபண்ட், மதிப்பு மற்றும் உந்துதல் ஆகிய இரண்டு முக்கிய முதலீட்டு காரணிகளை ஒன்றிணைக்கும் ஒரு ஒழுங்குமுறை மற்றும் வெளிப்படையான முதலீட்டு உத்திக்கான அணுகலுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கவர்ச்சிகரமான மதிப்பீடுகள் மதிப்பீட்டு ரீதியான நிம்மதியை அளிக்கக்கூடும் என்றாலும், நேர்மறையான உந்துதல், அதிகரித்து வரும் சந்தை நம்பிக்கையைக் குறிக்கக் கூடும். முதலீட்டாளர்கள் நிறுவனங்களின் மதிப்பீடுகள் மீது கவனம் செலுத்துகின்ற அதே வேளையில், புதிதாக உருவாகும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவுகின்ற வகையில் இந்தக் காரணிகளை இணைப்பது, இவ்விரு அளவுகோல்களிலும் வலுவான தன்மையை வெளிப்படுத்தும் நிறுவனங்களை அடையாளம் காணுவதற்கு இந்த உத்தியை செயல்படுத்துகிறது.

மாறிவரும் சந்தை மதிப்பீடுகள் மற்றும் போக்குகளுக்கு ஏற்ப முதலீட்டுத் தொகுப்பை உருவாக்க அனுமதிக்கின்ற இந்த உத்தியானது, ஒரு முறையான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது மேலும் ஒவ்வொரு காலாண்டிலும் மறுஆய்வு செய்யப்படுகிறது. முதலீட்டு ஒழுங்குமுறையைப் பேணுகின்ற அதே வேளையில், நீண்டகால ஈக்விட்டி வளர்ச்சியில் பங்கேற்க வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேறுபட்ட வழியை இந்த அணுகுமுறை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்றார்.

இந்த ஃபண்ட், பிளஸ்இ 500 பரந்த பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நிறுவனங்களின் பல்வகைப்பட்ட முதலீட்டு தொகுப்பின் வாய்ப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. மேலும், ஐசிஐசி ஐ ப்ரூ பிளஸ்இ 500 மொமண்டம் வால்யூ 50 தனிப்பயனாக்கப்பட்ட குறியீட்டைப் பின்பற்றும். ஒரு பங்கு, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலையில், 50 பங்குகளின் தொகுப்பைப் பராமரிக்க அடுத்தடுத்த தகுதியான பங்கு (கள்) தேர்ந்தெடுக்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு வெளிப்படையான மற்றும் முறையான முதலீட்டு கட்டமைப்பை வழங்குகின்ற இதன் விதிகளின் அடிப்படையிலான அணுகுமுறை, சந்தை மதிப்பீடுகளும் போக்குகளும் மாறும்போது, முதலீட்டுத் தொகுப்பை அவ்வப்போது புதுப்பிக்க உதவுகிறது.

மேலும், நிதியாண்டு 2027 இன் மூன்றாம் காலாண்டில் இந்த நிறுவனத்தின் கோரிக்கைத் தீர்வு விகிதம் 99.3% ஆக உள்ளது, மேலும் விசாரணைக்கு உட்படாத தனிநபர் கோரிக்கைகளுக்கான சராசரி தீர்வு நேரம் வெறும் 1 நாள் மட்டுமே ஆகும். இது, வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது. ஜூன் 30, 2026 நிலவரப்படி, நிறுவனத் தின் மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்கள் (ஏயூஎம்) ரூ. 3.34 லட்சம் கோடி ஆகும், மேலும் சொத்து புத்தகத்தின் உயர் தரத்தைக் குறிக்கின்ற வகையில் தொடக்கத்திலிருந்து பூஜ்ஜிய வருவாய் ஈட்டாத சொத்துக்கள் (என்பிஏ) ஐக் கொண்டுள்ளது.

ஐசிஐசிஐ ப்ருடென்ஷியல் லைஃப் பிளஸ்இ 500 மொமெண்டம் வால்யூ 50 இண்டெக்ஸ் ஃபண்ட், ஐசிஐசிஐ ப்ரு ஸ்மார்ட்கிட் அஷ்யூர், ஐசிஐசிஐ ப்ரு சிக்னேச்சர் அஷ்யூர், ஐசிஐசிஐ ப்ரு சிக்னேச்சர் ஆன்லைன் மற்றும் ஐசிஐசிஐ ப்ரு ஸ்மார்ட் இன்சூரன்ஸ் பிளான் பிளஸ் உள்ளிட்ட ஐசிஐசிஐ ப்ருடென்ஷியல் லைஃப்பின் யூலிப் (யூஎல்ஐபி) வழங்கல்களின் மூலம் கிடைக்கப்பெறும். இத்திட்டங்கள் ஆயுள் காப்பீட்டுடன் கூடியவை மற்றும் www.iciciprulife.com இணையதளத்தில் கிடைக்கின்றன.

# சுயசரிதை நூல் குறித்து சோனியா கருத்து; எனது வாழ்க்கையை பற்றி எழுதுவது எளிதாக இல்லை: நவம்பர் 10ம் தேதி வெளியீடு



சென்னை, 21 ஆகஸ்ட் 2026: காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவரான சோனியா காந்தியின் வாழ்க்கையை விவரிக்கும் 'பிலாங்கிங்: எ ஜர்னி ஆப் லவ்' எனும் 544 பக்க சுயசரிதை நூல் வரும் நவம்பர் 10ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

முதல் கட்டமாக 1 லட்சம் பிரதிநிதிகள் அச்சிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நூல் 1965ம் ஆண்டு இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரில் சோனியா காந்தி ஆங்கிலம் பயின்ற காலகட்டத்தில் இருந்து தொடங்குகிறது. அங்கு தான் 19 வயது மாணவியாக இருந்த சோனியா மைனோ, ராஜீவ் காந்தியை காதலிக்கத் தொடங்கினார். 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் திருமணம் நடந்தது.

அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள், சோனியா காந்திக்கும் இந்திரா காந்திக்கும் இடையிலான அறிமுகம், இந்தி மொழி கற்றல், புடவை அணிதல் மற்றும் இந்திய உணவை விரும்பி உண்ணுதல், அத்துடன் காந்தி குடும்பத்தை உலுக்கிய துயரச் சம்பவங்கள் ஆகியவற்றை நூல் விவரிக்கிறது.

இந்த நூல் குறித்து சோனியா காந்தி கூறுகையில், ''எனது வாழ்க்கையை பற்றி எழுதுவது எனக்கு எளிதாக அமையவில்லை. மனவேதனையும் இழப்புமே என்னை அரசியல் எனும் பொது வாழ்க்கைக்குள் தள்ளின. அதுவரை எனது தனிப்பட்ட வாழ்க்கையை நான் மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்தேன். எனது குடும்பத்தை பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளது. இத்தாலியின் சிறிய நகரத்தில் கழிந்த எனது குழந்தைப் பருவத்தின் எளிமையிலிருந்து, இந்தியாவில் கழிந்த பிற்காலத்தின் சிக்கலான சூழலை நோக்கிய பயணமாகவே இந்நூல் இருக்கும்'' என்றார்.

# ஆதித்யா பிர்லா கேபிடல் நிறுவனம் தங்கக்கடன் வணிகத்தில் நுழைகிறது; அடுத்த மூன்று ஆண்டுகளில் 1,000 தங்கக்கடன் கிளைகளைத் திறக்க உள்ளது




சென்னை 21, ஆகஸ்ட் 2026: இந்தியாவின் முன்னணி பல்துறை நிதிச் சேவை நிறுவனங்களில் ஒன்றான ஆதித்யா பிர்லா கேபிட்டல் லிமிடெட் ('ஏபிசிஎல்/நிறுவனம்') நிறுவனத்தின் என்பிஎஃப்சி வணிகப்பிரிவு, அதன் பிணையக் கடன் வழங்கும் தொகுப்பின் மூலோபாய விரிவாக்கத்தைக் குறிக்கின்ற வகையில் தங்கக் கடன் வணிகத்தில் அதன் நுழைவை இன்று அறிவித்துள்ளது. இந்தத் தங்கக் கடன் சேவையானது, நிறுவனத்தின் தற்போதைய சில்லறை மற்றும் எம்எஸ்எம்இ கடன் வணிகத்திற்கு வலுசேர்ப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு வெளிப்படையான, நெகிழ்வுத் தன்மை கொண்ட மற்றும் பிணையத்துடன் கூடிய கடன் தீர்வை வழங்குகிறது.

இந்த நிறுவனம், மார்ச் 2027-க்குள், அதிக வாய்ப்புள்ள சந்தைகளை முழுவதிலும் 200-300 தனிப்பட்ட தங்கக் கடன் கிளைகளை கட்டம் கட்டமாக அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில், ஏபிசிஎல்-என்பிஎஃப்சி வணிகப் பிரிவு, வலுவான அகில இந்திய கிளை அமைப்பை உருவாக்கி, நாடு முழுவதும் அதன் இருப்பை மேலும் வலுப்படுத்துகின்ற வகையில் சுமார் 1,000 தங்கக் கடன் கிளைகளைக் கொண்ட ஒரு வலையமைப்பை நிறுவ இலக்கு வைத்துள்ளது.

நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் வசதி ஆகியவற்றை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஆதித்யா பிர்லா கேப்பிடல் நிறுவனத்தின் தங்கக் கடன் வழங்கல், பிரத்தியேக கிளை சார்ந்த சேவையை பன்முக டிஜிட்டல் திறன்களுடன் இணைக்கிறது. இது, வெளிப்படையான விலை நிர்ணயம், அடகு வைக்கப்பட்ட தங்கத்தின் பாதுகாப்பான கையாளுதல் மற்றும் விரைவான கடன் வழங்கல் ஆகியவற்றின் ஆதரவுடன், வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற கடன் பெறும் அனுபவத்தை வழங்கும்.

இந்தத் தொடக்கம் குறித்து கருத்து தெரிவித்த, ஆதித்யா பிர்லா கேப்பிடல் லிமிடெட் நிறுவனத்தின் என்பிஎஃப்சி பிரிவின் நிர்வாக இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான திரு. ராகேஷ் சிங் கூறுகையில், "இந்தியாவில் தங்கக் கடன்கள் வலுவான கட்டமைப்பு வளர்ச்சியைக் காண்கின்றன, மேலும் இந்தப் பிரிவில் எங்கள் நுழைவு, எங்களின் பிணையக் கடன் வழங்கும் உத்தியின் ஒரு இயற்கையான விரிவாக்கமாக இருக்கிறது. நம்பிக்கை மிகவும் முக்கியமானதாக இருக்கிற ஒரு பிரிவில், வாடிக்கையாளர்கள் வெளிப்படைத்தன்மையையும், தங்களின் தங்கத்தின் பாதுகாப்பான கையாளுதலையும், தங்களின் மதிப்புமிக்க சொத்துக்கள் பாதுகாப்பான மற்றும் நம்பிக்கைக்குரிய கைகளில் உள்ளன என்ற நம்பிக்கையையும் எதிர்பார்க்கிறார்கள். ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைமுறை தலைமுறையான நம்பிக்கை, நேர்மை மற்றும் பொறுப்பான நிர்வாகத்தின் மரபுப் பின்னணியுடன், இந்த வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாங்கள் நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளோம். இந்தக் கொள்கைகளால் வடிவமைக்கப்பட்டு, ஆளுமை, விவேகமான இடர் மேலாண்மை, செயல்பாட்டு சிறப்புத்திறன் மற்றும் வாடிக்கையாளர் முதன்மை அணுகுமுறை ஆகியவற்றில் வலுவான ஒரு கவனம் செலுத்தி, எங்களின் தங்கக் கடன் வணிகத்தை அடித்தளத்திலிருந்து கட்டமைத்து வருகிறோம். இந்தியா முழுவதும் எங்களின் இருப்பை விரிவுபடுத்தும்போது, எங்களின் விரிவான விநியோக வலையமைப்பையும் டிஜிட்டல் திறன்களையும் பயன்படுத்தி மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவோம். ஒரு நம்பிக்கைக் குரிய மரபு மற்றும் சிந்தனையுடன் கட்டப்பட்ட வணிகம் ஆகியவற்றில் எங்கள் இணைவு, இந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் சில்லறை கடன் பிரிவுகளில் ஒன்றில் ஒரு விருப்பமான கடன் வழங்கினராக ஆதித்யா பிர்லா கேப்பிடல் நிறுவனத்தின் நிலையை மேலும் வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்றார்.

ஆதித்ய பிர்லா கேபிடல் சூழலமைப்பில் உள்ள ஏற்கனவே யுள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதுடன், நேரடி கிளைகள் மற்றும் டிஜிட்டல் தளங்களின் சுருங்கிணைந்த விநியோக வலையமைப்பு ஆகியவற்றின் மூலம் புதிய வாடிக்கையாளர்களையும் சென்றடைகின்ற இந்த வழங்கல், நகர்ப்புற மற்றும் அரை-நகர்ப்புற சந்தைகளில் உள்ள பல்வேறு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

# போராட்டம் வாபசான நிலையில் ஜார்கண்டில் பணி நியமனம் பெற்றவர்கள் போராட்டம்

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: ஜார்க்கண்ட் மாநிலத்தில் போட்டி தேர்வுகளில் முறைகேடுகள் நடந்ததாக கூறி, கடந்த 26 நாட்களாக மாணவர்கள் நடத்தி வந்த போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, 22 போட்டி தேர்வு களை ரத்து செய்வதாக வும், நீதிபதி தலைமையிலான விசாரணை, விரைவு நீதிமன்ற நடவடிக்கை மற்றும் அமலாக்க துறை விசாரணைக்கும் அம்மாநில முதல்வர் ஹேமந்த் சோரன் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, மாணவர்கள், போராட்டத்தை தற்காலிகமாக முடித்து கொண்டனர்.

இந்நிலையில், மூத்த ஐஏஎஸ் அதிகாரி அமிதாப் கௌஷல் தலைமையிலான குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு எதிர்காலத்தில் தேர்வுகள் முறைகேடின்றி வெளிப் படைத்தன்மையுடன் நடைபெற தேவையான சீர்திருத்தங்களை அரசுக்கு பரிந்துரைக்கும். ஜார்க்கண்ட் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் - ஸ்டாப் செலக்‌ஷன் கமிஷன் சீர்திருத்தம் தங்களது போராட்டத்தை 2 மாதங்களுக்கு ஒத்திவைத்திருந்தாலும், இம்முறைகேடு வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையில், இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டதால், ஏற்கனவே இத்தேர்வுகள் மூலம் பணி நியமனம் பெற்ற மற்றும் தேர்ச்சி அடைந்த சுமார் 2,000 பேர், தங்களது எதிர்காலம் பாதிக்கப் படுவதாக கூறி ராஞ்சியில் உள்ள அரசு அலுவலகங்கள் முன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## செம்போஸ்கி மோஷன் பிக்சர்ஸ், ஃபார்ஸ் ஃபிலிம்ஸ் வழங்கும் 'டிஸ்கோ' – நவம்பர் 6-ல் உலகமெங்கும் ரிலீஸ்!

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: 'அஞ்சக்கள்ளகோக்கன்' படத்தைத் தொடர்ந்து, இயக்குநர் உல்லாஸ் செம்பன் தனது அடுத்த பிரம்மாண்ட படைப்பான 'டிஸ்கோ' படத்தின் அதிகாரப்பூர்வ ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளார்.

'அங்கமாலி டைரீஸ்' வெற்றிக்குப் பிறகு, பிரபல நடிகர்-எழுத்தாளர் செம்பன் வினோத் ஜோஸ் மற்றும் ஆண்டனி வர்கீஸ் மீண்டும் இணையும் இப்படத்திற்கு செம்பன் வினோத் ஜோஸ் திரைக்கதை எழுதியுள்ளார்.

செம்போஸ்கி மோஷன் பிக்சர்ஸ் மற்றும் அகமது கோல்சினின் ஃபார்ஸ் ஃபிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இப்படத்தை மிகப்பிரம்மாண்டமாக தயாரித்துள்ளன.

ஆண்டனி வர்கீஸுடன் இணைந்து தேவ் மோகன், லுக்மேன் அவ்ரான், அர்ஜுன் அசோகன், செம்பன் வினோத் ஜோஸ், சாகர் சூர்யா, விஷ்ணு உன்னிகிருஷ்ணன், ஃபெமினா ஜார்ஜ், கல்யாணி அணில், மீரா வாசுதேவன், காயத்ரி சுரேஷ், செந்தில் கிருஷ்ணா, மணிகண்டன் ஆச்சாரி, அப்பானி சரத், சினோஜ் வர்கீஸ் மற்றும் வினீத் தட்டில் ஆகிய முன்னணி நட்சத்திரங்கள் இப்படத்தில் நடித்துள்ளனர்.



தற்போது வெளியாகியுள்ள ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில், நடிகர்கள் அனைவரும் கருப்பு உடையில் கையில் துப்பாக்கிகளுடன் சர்வதேச ஹாலிவுட் ஆக்சன் த்ரில்லர் பாணியில் அல்ட்ரா-ஸ்டைலிஷ் தோற்றத்தில் காட்சியளிக்கின்றனர். டைட்டில் லோகோவில் இடம்பெற்றுள்ள துப்பாக்கி குறியீடு, இது ஒரு மிகச்சிறந்த ஹை-வோல்டேஜ் ஆக்ஷன் மற்றும் கன்-ஃபைட் என்டர்டெய்னராக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

அல்ட்ரா-மாஸ் சர்வதேச ஸ்டைலில் உருவாகியுள்ள 'டிஸ்கோ' திரைப்படம் வருகிற நவம்பர் 6-ஆம் தேதி அன்று திரையரங்குகளில் உலகமெங்கும் வெளியாகவுள்ளது.

தொழில்நுட்பக் குழு:

இயக்கம்: உல்லாஸ் செம்பன், திரைக்கதை: செம்பன் வினோத் ஜோஸ், ஒளிப்பதிவு: ஆர்மோ, இசை: மணிகண்டன் அய்யப்பா, படத்தொகுப்பு: ரோஹித் வி.எஸ். வாரியத், கலை இயக்கம்: கோகுல் தாஸ், சண்டைப் பயிற்சி: கலை கிங்சன், ஆடை வடிவமைப்பு: மெல்வி ஜே, ஒப்பனை: ரோனெக்ஸ் சேவியர், விஎஃப்எக்ஸ் : ஐடென்ட் லேப்ஸ், விநியோகம்: ஐகான் சினிமாஸ்.

## தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தவெகவின் நாடகம் அம்பலம்: டிடிவி தினகரன் விமர்சனம்

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தவெக அரசின் நிலைப்பாட்டில் மாற்றமா? என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

சென்னை அடுத்த கோவளத்தில் உள்ள தனியார் விடுதியில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்ற தென்மண்டல கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய், தொகுதி மறுவரையறை விவகாரத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் மக்களவையில் குறையாமல் இருப்பதை சட்டரீதியாக உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆகஸ்ட் 8-ஆம் தேதி தவெக தோழமைக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டத்தையும், அதன் தொடர்ச்சியாக ஆகஸ்ட் 12-ஆம் தேதி சட்டமன்றத்தில் தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தையும் நிறைவேற்றிய முதலமைச்சர் ஜோசப் விஜய், ஒரே வாரத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றியிருப்பது முற்றிலும் முரண்பாடாக அமைந்துள்ளது.

தேர்தலுக்கு முன்பாக அளித்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றாமல் விவசாயிகளையும், மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் தவெக அரசு, தற்போது நாடாளுமன்றத்தில் மத்திய அரசால் தொகுதி மறுவரையறை தொடர்பாக எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகாத நிலையில், அதுகுறித்து அடுத்தடுத்து கூட்டங்களைக் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி தவெக அரசு நடத்திய நாடகம், முதலமைச்சர் ஜோசப் விஜய் 



இன்றைய உரையின் மூலமாகவே அம்பலமாகியுள்ளது.

தொகுதி மறுவரையறையால் மாநிலங்களுக்கான, குறிப்பாக தமிழ்நாட்டின், மக்களவைப் பிரதிநிதித்துவ விகிதம் குறையாது என ஏற்கனவே உறுதியளித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா முன்னிலையிலேயே, முதலமைச்சர் ஜோசப் விஜய் அதே கோரிக்கையை முன்வைத்திருப்பது வேடிக்கையாக உள்ளது.

ஆகஸ்ட் 8-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தொகுதி மறுவரையறைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்துவிட்டு, அடுத்த வாரத்தில் அதே கோரிக்கையை முன்வைத்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, அதற்கடுத்த வாரமான இன்று முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்திருப்பதன் மூலம், வாரத்திற்கு வாரம் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் தவெக அரசின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன? என்ற கேள்வி அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ளது.

எனவே, தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளைத் திசை திருப்பும் வகையில், இதுபோன்ற அவசியமற்ற தீர்மானங்களை சட்டமன்றத்தில் முன்வைப்பதை விட்டுவிட்டு, தமிழகம் மற்றும் தமிழக மக்களின் நலன் சார்ந்த விவகாரங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு லைஃப்ஸ்டைலுக்கும் பெஸ்ட் ஃபோல்டபிள் : கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா

கோயம்புத்தூர் 21, ஆகஸ்ட் 2026: சாம்சங்-ன் சமீபத்திய படைப்புகளான கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா ஆகியவை, வெவ்வேறு வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட இரண்டு விதமான தனித்துவமான வடிவங்களை வெளிவந்து, பெஸ்ட் ஃபோல்டபிள் என்பதற்கான புதிய இலக்கணத்தை வகுக்கின்றன. நீங்கள் பொழுதுபோக்கில் மூழ்கித் திளைப்பவராக இருந்தாலும், பல்பணியிலோ செய்பவராக இருந்தாலும் அல்லது உள்ளடக்க உருவாக்கத்திலோ மூழ்கியிருந்தாலும், உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் டிசைன் மற்றும் செயல்பாடுகளின் சரியான கலவையை இந்த சாதனங்கள் வழங்குகின்றன.

கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 சாதனமானது, அதிவேகமான டிஸ்கவரி மற்றும் கன்டென்ட் எக்ஸ்பீரியன்ஸ்க்கான பெஸ்ட் ஃபோல்டபிள் தனித்து நிற்கிறது. இதன் புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட அளவுகள் சாதனம் மூடியிருக்கும் போது காம்பேக்ட் ப்ரொஃபைலை உறுதி செய்வதோடு, அதை திறக்கும் போது கன்டென்ட் எக்ஸ்பீரியன்ஸை மேம்படுத்தும் ஒரு அகலமான கேன்வாஸை வெளிப்படுத்துகிறது. இதன் 4:3 மெயின் டிஸ்ப்ளே மூவிகள், கேமிங் மற்றும் சோஷியல் மீடியாவிற்கு ஒரு சிறப்பான வியூவிங் எக்ஸ்பீரியன்ஸை வழங்கும் அதே வேளையில், சாதனத்தை 3:4 ஓரியன்டேஷனுக்கு ரொட்டேட் செய்வது வாசிப்பதற்கும் பிரவுசிங் செய்வதற்கும் ஏற்றதாக மாற்றுகிறது. வெறும் 201 கிராம் எடையில், இது சாம்சங்-ன் இதுவரை வெளிவந்த சாதனங்களிலேயே மிகவும் லேசான கேலக்ஸி இசட் ஃபோல்ட் ஆகும். இது போர்ட்டபிலிட்டியை 26 மணிநேரம் வரை வீடியோ பிளேபேக்கை சப்போர்ட் செய்யும் 4,800எம்ஏஹெச் பேட்டரியுடன் இணைக்கிறது. கன்டென்ட்டை தடையற்ற மற்றும் இயல்பான முறையில் பயன்படுத்த விரும்பும் யூசர்களுக்கு இது சிறந்த ஃபோல்டபிளாக அமைகிறது.

மற்றொருபுறம், கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா சாதனமானது, சக்திவாய்ந்த புரொடக்டிவிட்டி மற்றும் கிரியேஷனுக்கான பெஸ்ட் ஃபோல்டபிள் உள்ளது. சாம்சங்-ன் கேலக்ஸி இசட் சீரிஸில் முதல்




அல்ட்ரா மாடலான இது, மல்டிடாஸ்கிங் மற்றும் கிரியேட்டிவ் வேலைகளுக்கான பெரிய வொர்க்பேஸை வழங்கும் அகலமான 8-இன்ச் டிஸ்ப்ளேவைக் கொண்டுள்ளது. இந்த அளவு இருந்தபோதிலும், இது அன்ஃபோல்ட் செய்யப்பட்ட நிலையில் வெறும் 4.1எம்எம் என்ற குறிப்பிடத்தக்க ஸ்லிம் அளவிலும், வெறும் 215 கிராம் எடையிலும் உள்ளது. 200எம்பி மெயின் கேமரா உள்ளடங்கிய இதன் அட்வான்ஸ்டு கேமரா சிஸ்டம், ஒரே சாதனத்தில் இருந்து கேப்சர், எடிட் மற்றும் ஷேர் செய்ய விரும்பும் கிரியேட்டர்களுக்கான திறன்களை மேலும் விரிவுபடுத்துகிறது. சக்திவாய்ந்த மொபைல் வொர்க்பேஸ் தேவைப்படும் ப்ரொபஷனல்கள் மற்றும் கிரியேட்டர்களுக்கு இது பெஸ்ட் ஃபோல்டபிள் அமைகிறது.

ஒன்றாக, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா ஆகியவை பெஸ்ட் ஃபோல்டபிள் இருப்பதன் இரண்டு வெவ்வேறு பரிமாணங்களை பிரதிபலிக்கின்றன. கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 கன்டென்ட்டை சிறப்பான முறையில் எக்ஸ்பீரியன்ஸ் செய்வதற்கான டிஸ்கவரிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா அதிகபட்ச புரொடக்டிவிட்டி மற்றும் கிரியேஷனுக்காக உருவாக்கப்பட்டு, ஒரு ஃபோல்டபிள் ஃபார்மில் அல்ட்ரா எக்ஸ்பீரியன்ஸின் பவரை வழங்குகிறது.

இறுதியில், இந்தத் தேர்வு உங்கள் லைஃப்ஸ்டைலை பொறுத்தது. சிறந்த கன்டென்ட் டிஸ்கவரிக்கான சிறந்த ஃபோல்டபிளான கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 சாதனத்தை நீங்கள் தேர்வு செய்யப் போகிறீர்களா, அல்லது சக்திவாய்ந்த புரொடக்டிவிட்டி மற்றும் கிரியேஷனுக்கான பெஸ்ட் ஃபோல்டபிள்-லான கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா சாதனத்தை தேர்வு செய்யப் போகிறீர்களா? முடிவு உங்களுடையது.

## குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின் பொருட்களை ஏற்றுமதி செய்வது குறித்தக் கருத்தரங்கம் சென்னை ஐஐடி-ல் நடைபெற்றது

சென்னை, 21 ஆகஸ்ட் 2026: குறு, சிறு, நடுத்தர தொழில் துறையின் உற்பத்திப் பொருட்களை உள்ளூரிலிருந்து உலக நாடுகளுக்கு டிஜிட்டல் வர்த்தம் மூலம் ஏற்றுமதி செய்வது குறித்தத் தேசிய அளவிலான கருத்தரங்கம் சென்னை ஐஐடி-ல் ஆகஸ்ட் 18 அன்று நடைபெற்றது. மத்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை அமைச்சகம் (எம்எஸ்எம்இ) ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையினர், தொழில்முனைவோர், மாணவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், நிதி நிறுவனப் பிரதிநிதிகள், ஏற்றுமதியாளர்கள், டிஜிட்டல் வர்த்தக நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறையின் தயாரிப்புகளைத் தேசிய, சர்வ தேச சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கான நடைமுறை வழிமுறைகள் குறித்து விவாதித்தனர். இக்கருத்தரங்கில் தொடக்க அமர்வில் சிறப்புரையாற்றிய தமிழ்நாட்டின் எம்எஸ் எம்இ துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு பிரவீன் யாதவ், டிஜிட்டல் வர்த்தகம் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையை உலகளாவியச் சந்தைகளை அணுகுவதற்கு வழி வகை செய்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் இதற்கு உகந்த சூழலை உருவாக்க மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே வலிமையான ஒருங்கிணைப்புத் தேவை என்று அழைப்பு விடுத்த அவர் இதன் மூலம் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின் உலகளாவிய போட்டித் தன்மையை விரைவாக எதிர் கொள்ள முடியும் என்று கூறினார்.